# பெப்ரவரி – 12 – திங்கள்

## புனித வால் பர்க்கா

## நீர் நல்லவர்! நன்மையே செய்பவர்: திபா. 119:68

### முதல் வாசகம் : யாக்கோபு1 : 1 – 11

சிதறுண்டு வாழும் பன்னிரு குலத்தினருக்கு, கடவுளுக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் பணியாளனாகிய யாக்கோபு வாழ்த்துக் கூறி எழுதுவது. என் சகோதர சகோதரிகளே, பல வகையான சோதனைகளுக்கு உள்ளாகும்போது நீங்கள் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டிருங்கள்.உங்கள் நம்பிக்கை சோதிக்கப்படும்போது மனவுறுதி உண்டாகும் என்பது உங்களுக்குத் தெரியும்.உங்கள் மனவுறுதி நிறைவான செயல்களால் விளங்கட்டும். அப்பொழுது எக்குறையுமின்றி முற்றும் நிறைவுள்ளவர்களாய் இருப்பீர்கள்.உங்களிடையே குறைவான ஞானம் கொண்டிருப்போர் கடவுளிடத்தில் கேட்கட்டும் அப்போது அவரும் ஞானத்தைக் கொடுப்பார். அவர் முகம் கோணாமல் தாராளமாய் எல்லாருக்கும் கொடுப்பவர்.ஆனால் நம்பிக்கையோடு, ஐயப்பாடின்றிக் கேட்க வேண்டும். ஐயப்பாடு கொள்பவர்கள் காற்றினால் அலைக்கழிக்கப்படும் கடல் அலையைப் போன்றவர்கள்.எனவே இத்தகைய இருமனமுள்ள,நிலையற்ற போக்குடையவர்கள் ஆண்டவரிடம் ஏதாவது பெற முடியும் என நினைக்காதிருக்கட்டும்.தாழ்நிலையில் உள்ள சகோதரர் சகோதரிகள் தாங்கள் உயர்வுபெறும்போது மகிழ்ச்சியடைவார்களாக!செல்வச் செழிப்பில் இருப்பவர்கள் தாங்கள் தாழ்நிலை அடையும்போதும் மகிழ்ச்சியாய் இருப்பார்களாக! ஏனெனில் செல்வர்கள் புல்வெளிப் பூவைப்போல மறைந்தொழிவார்கள்.கதிரவன் எழ, வெயில் ஏறிப் புல் உலர்ந்துபோம். அதன் பூ வதங்கி விழும் அதன் அழகிய தோற்றமும் அழிந்துவிடும். அவ்வாறே செல்வரும் தம் அலுவல்களில் ஈடுபடும்போதே அழிவுறுவர்.

**பதில்பாடல் :** நான் பிழைத்திருக்கும்படி உமது இரக்கம் ஆண்டவரே எனக்குக் கிடைப்பதாக

### நற்செய்தி : மாற்கு 8: 11 - 13

அந்நாள்களில் பரிசேயர் வந்து இயேசுவோடு வாதாடத் தொடங்கினர் வானத்திலிருந்து அடையாளம் ஒன்றைக் காட்டும்படி அவரைச் சோதித்தனர். அவர் பெருமூச்சுவிட்டு, ”இந்தத் தலைமுறையினர் அடையாளம் கேட்பதேன்? இத்தலை முறையினருக்கு அடையாளம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்” என்றார். அவர்களை விட்டு அகன்று மீண்டும் படகேறி அவர் மறுகரைக்குச் சென்றார்.

**தியானம்:** நற்செய்தி வாசகத்தில் பரிசேயர்கள் வானத்திலிருந்து அடையாளம் ஒன்றைக் காட்டும் படி அவரை சோதித்தனர். யூதர்கள் யாரெல்லாம் தங்களை மெசியா என்று அழைத்துக் கொண்டார்களோ அவர்களிடம் அடையாளம் கேட்பதை வாடிக்கையாகக் கொண்டிருந்தார்கள். காரணம் கடவுளை அவர்கள் சாதாரணமானவராக அல்ல அசாதாரணமானவராக அற்புதங்களை அதிசயங்களை செய்கின்றவராகப் பார்த்தார்கள். அதனாலே அவர்கள் அடையாளம் கேட்டார்கள். மற்றவர்களிடம் அவர்கள் அடையாளம் கேட்டது வேண்டுமானால் தவறில்லாமல் இருக்கலாம். ஆனால் இயேசுவிடம் அவர்கள் அடையாளம் கேட்டது மிகப் பெரிய தவறாகும். ஏனென்றால் இயேசு, தான் இறை மகன் என்பதை தன்னுடைய போதனையாலும் வாழ்வாலும் பலமுறை அவர்களுக்கு நிரூபித்துக் காட்டினார். அப்படி இருந்தும் அவர்கள் இயேசுவை நம்பாமல் அவரிடம் அடையாளம் கேட்டது மிகவும் வேதனையான ஒரு காரியமாகும். யோனாவின் போதனையைக் கேட்டு நினிவே நகர மக்கள் மனம் ணமாறினார்கள். ஆனால் யோனாவை விடப் பெரியவரான இயேசுவின் போதனைக் கேட்டும் நம்பாது கண்டிக்கப்பட வேண்டிய விசயம் தான். ஆகவே நாம் இயேசுவின் மீது ஆழமான நம்பிக்கை வைத்து வாழ்வோம் .அவருடைய வார்த்தைகளைக் கேட்டு, நம்முடையவாழ்வை செம்மைப்படுத்துவோம் .